# வாழும் தேவன் வருவான்

வாழும் தேவன் வருவான்
நீதி ஜெயித்திட சேரும் கரங்களில்
வல்லமையில் வருவான்
ஏது பயமும் இல்லை என்றாகின்ற
நல்லுணர்வில் வருவான்
வாழும் தேவன் வருவதும் வராமல் ஆவதும்
நம் பூமி நன்மை நிறைய
நாளும் நாமும் உழைப்பதிலே
நம் இறைவன் அவன் நல் இறைவன் வருவான் (3)
வாழும் தேவன் வருவான்

**1**

நாளும் வரும் நலமும் வரும்
வருவான் என் இறைவன் வளரும் உறவுகளில்
நாடுகளில் அமைதி வரும்
வருவான் என் இறைவன் வளரும் உறவுகளில்
பசுவும் சிங்கமும் ஒன்றாய் மேயுமே
இறைவனின் அறிவு தான் எங்கும் நிரம்புமே
யாவும் ஆதியிலே ஆண்டவனின் ஆசியிலே
இருந்தது போல் ஆகுமையா நலமே சேருமையா

**2**

அன்பு என்னும் வேதம் வரும்
வருவான் என் இறைவன் வளரும் உறவுகளில்
அமைதி என்னும் கீதம் வரும்
வருவான் என் இறைவன் வளரும் உறவுகளில்
பகையும் போர்களும் மண்ணில் மறைந்திடும்
மனிதம் மலர்ந்திடும் மகிழ்வும் பிறந்திடும்
யாவும் ஆதியிலே ஆண்டவனின் ஆசியிலே
இருந்தது போல் ஆகுமையா நலமே சேருமையா